ஸ்ரீகுருப்யோ நம :

# ஸ்ரீகுருப்ரகாசம்

**சுடர் 5**

## குரு–தீக்ஷை

"யம் காமயே தந்த முக்ரம் க்ருணோமிதம்
ப்ரஹ்மாணம் தம்ருஷிம் தம் ஸுமேதாம்" –ருக்வேதீய தேவீஸூக்தம்–5

எவனை நான் விரும்புகிறேனோ அனை நான் எல்லோருக்கும் உயர்ந்தவனாகச் செய்கிறேன். அவனை ப்ரஹ்மாவாகவோ அவனை ரிஷியாகவோ அவனை அறிவில் சிறந்தவனாகவோ செய்து விடுகிறேன். என்கிறாள் தேவீ.

விஜானந்தி மஹாவாக்யம் குரு: சரணஸேவய:
தேவைஸந்நியாஸி ந ப்ரோக்தா இதரேவேஷதாரிண: –(குருகீதை–2–4)

குருவினுடைய பாத ஸேவையால்தான் மஹாவாக்யத்தை அறிகிறார்கள். அவர்களே ஸந்நியாஸிகள் எனப்படுவர். பிறர் யாவரும் வேஷதாரிகளாவர்.

### 1. குருநாதர்:

அருட்கவி குரு ஸ்ரீசிதானந்தர் பற்றி முதலில் தெரிந்து கொள்வோம். இவருடைய இயற்பெயர் நடிமிண்டி ப்ரஹ்மஸ்ரீந.ஸுப்ரஹ்மண்ய ஐயர் என்பது. காஞ்சி மண்டலத்தைச் சேர்ந்த வந்தவாசி தாலுகாவில் இருக்கும் செப்பிட்டாங்குளம் என்னும் கிராமத்தில் "நடிமிண்டி" என்ற தெலுங்கு ப்ரதேசத்தைச் சேர்ந்த குடியில் தோன்றியவர். ஸ்ரீநரஸய்யாவுக்கும் மாது ஸ்ரீகாமாக்ஷியம்மாளுக்கும் (1882ம்) சித்ரபானு வருடம் ஐப்பசி மீ மூலநக்ஷத்ரத்தில் உதித்தார். பதரிகாச்ரமவாஸியும், ப்ரம்மஞானியும், சிருங்கேரி சாரதாபீட வழிதோன்றலும் அவதூதருமான **ஸ்ரீகுஹானந்தநாதர்** என்ற மஹானிடம் (1911ல்) ஸாதாரண வருடம் தைமீ அமாவாசை மஹோதய புண்யகாலத்தில் ப்ரயாகைக்கு சென்றிருந்த சமயம் பூர்ணமான சாக்த தீக்ஷை பெற்றவர்.

சென்னை திருவல்லிக் கேணி ஹிந்துஹைஸ்கூலில் ஆசிரியராகவும் பின்பு தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி வந்தவர். தமிழில் மிகுந்த புலமை பெற்று **'அருட்கவி' "அபிநவபாஸ்கர"** என்ற பட்டங்கள் பெற்றவர்.

ஸ்ரீவித்யா பூஜையில் தன் குருவின் கட்டளைப்படி முதலில் ரஹஸ்யமாக, மானஸீக முறையில் தவமாக உபாஸித்து பின் பல தத்வங்களை வெளிப்படுத்தி நூல் மூலமாகவும், சொற்பொழிவு மூலமாகவும் ப்ரசாரம் செய்து நூற்றுக் கணக்கான பேர்களுக்கு தேவி வழிபாட்டில் தீக்ஷை கொடுத்தவர். ஸ்ரீவித்யாபூஜை மூலம் அத்வைதத்தை அனுபவ பூர்வமாக உணர வைத்தவர். காஞ்சி ஸ்ரீஆசார்யாளிடம் நெருக்கம் கொண்டிருந்தவர். சென்னை பழவந்தாங்கலில் வசித்து வந்தார்கள். இவரிடம் ஸ்ரீவித்யா தீக்ஷை பெற்றவர்களையும், நண்பர்களையும் கொண்ட **ப்ரஹ்மவித்யா விமர்சினி ஸபா** என்ற பெயரில் விளங்கிய ஸ்தாபனம் பின்பு **குஹானந்தமண்டலி** என்ற பெயரில் பிரபலமாக விளங்கியது. ஸ்ரீவித்யா உலகில் இதன் பெயரைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது.

**ஸ்ரீசிதானந்தநாதர்** என்ற தீக்ஷாநாமம் கொண்ட இவர்கள்தான் நமது ஸ்ரீஸ்வாமியின் குருவாக அமைந்தார். ஓர் ஸர்வக்ஞரான ஆத்ம ஞானிதான் தனக்கு குருவாக வேண்டும் என்ற இவரது நல்லெண்ணத்தை தேவி பூர்த்தி செய்தாள்.

குருவான ஸ்ரீஸார் அவர்களுடன் ஸ்ரீஸ்வாமி சந்தித்த தினம் முதல் தொடர்ந்து தொடர்பு கொண்டு வந்தார். அவரும் இவருடைய ஞானத்தையும், வைதீக அறிவையும், மன ஒருமைப்பாட்டையும் கண்டு தான் பூஜைக்கு செல்லும் இடங்களுக்கெல்லாம் இவரையும் அழைத்துக் கொண்டு செல்வது வழக்கமாகியிருந்தது.

## 2. குரு தீக்ஷை

1936–ம் ஆண்டு. ஒரு வ்யாஸ பூர்ணிமா. (ஆனிமாத பௌர்ணமி) காஞ்சீபுரத்தில் ஸ்ரீமடத்தில் ஸ்ரீலலிதா த்ரிசதியாகம் ஏற்படாகி ஸ்ரீஸார் அவர்கள் தலைமையில் நடக்க இருந்தது. அதற்கு பல இடங்களிலிருந்தும் உபாஸக ச்ரேஷ்டர்களும், வேத விற்பன்னர்களும் வந்திருந்தனர். அதனை ஆந்த்ர வாஸியான ஸ்ரீநஞ்சுண்ட தீக்ஷதர் 'ஸ்ரீஸார்' அவர்களிடம் வந்து செய்ய பணித்தத்தின் நிமித்தம் இது ஏற்படாகி இருந்தது. அங்கு ப்ரதான கலசப்ரதிஷ்டை முதலானதுகளைச் செய்ய ஸ்ரீஸ்வாமியையே ஸ்ரீஸார் அவர்கள் நியமித்தார்கள். ப்ரதான யாகத்தில் ப்ரதான கலச பூஜைகள் செய்ய தனக்களித்த வாய்ப்பை கண்டு குருவின் கருணா விலாஸம் புலப்பட்டது. (சென்னையில் பல பூஜைகளிலும் பல தீக்ஷா பூர்வாங்கங்களிலும் இவரைத்தான் பூஜை செய்யச் சொல்லியிருக்கிறார். ஆனாலும் அன்று வரையில் இவருக்கு தீக்ஷை செய்வது பற்றி ஸ்ரீஸார் எதுவும்

சொல்லவில்லை. இந்த எண்ணமே மனதில் சுழன்று கொண்டிருந்த ஸ்ரீஸ்வாமிக்கு இவரின் நண்பரான டாக்டர் அனந்த க்ருஷ்ணன் தீக்ஷையில் தான் கலந்து கொண்ட நேரத்தில் கீழ்வருமாறு ஸ்ரீஅம்பாளின் அசரீரி கேட்டது:–

**உனக்கு தீக்ஷை இங்கில்லை; காஞ்சீபுரத்தில் தான் !**

எனவே மனதிலே ஏற்பட்ட இந்த உறுதி!யுடன் காஞ்சியிலே பூஜையை துவக்கினார். இவருடன் இவர் நண்பர் ஸ்ரீஅருணாசல சாஸ்த்ரிகள் என்பவரும் இருந்தார். பூஜை துவங்கு முன்பு 'ஸ்ரீஸார்' அவர்களிடம் கலசப்ரதிஷ்டை ஸம்பந்தமாக சில விஷயங்களை வினவியபோது ஸ்ரீஸார் அவர்கள் கார்வேட்நகர் புத்தகங்கள் சிலவற்றைப் பார்த்து அதன்படி 'திதிநித்யைகளைக் குறிப்பிட்டு எழுதிக் கொண்டு அதன்படி செய்யுமாறு பணித்தார்கள். இந்த பூஜை முடிவில்– த்ரிசதீயாகத்தின் பூர்த்தியில் மேற்சொன்ன வ்யாஸபூர்ணிமாவில், கிடைத்தற்கரியதும், மிக உயர்ந்ததுமான சாக்ததீக்ஷை இவருக்கு ஸ்ரீசிதானந்தநாதரால் அருளப்பட்டது. ஸ்ரீஸ்வாமி அவர்களின் மனதில் நினைவு தெரிந்த காலம் முதல் ஏற்பட்டிருந்த தாபத்திற்கு அன்றுதான் சமனம் ஏற்பட்டது.

## 3. தீக்ஷாதத்வம்

ஸ்ரீவித்யா மந்த்ர தீக்ஷை செய்துகொண்ட நமது ஸ்வாமி – தீக்ஷா நாமமாக ஸ்ரீஅனந்தானந்தநாதர் எனப்பெயர் பெற்று பிற்காலத்தில் முடிவற்ற ஆனந்தத்தை ஸாதகர்களுக்குக் கொடுக்கும் நிலையைப் பெற்றார். (இனி இவரை ஸ்ரீஸ்வாமி என்றோ ஸ்ரீஅனந்தானந்தநாதர் என்றோ முழுப் பெயரைக் குறிப்பிடாமல் குருநாதர் என்றே சொல்வோம்)

### இந்நிலையில் தீக்ஷையின் மகிமை பற்றி

இந்த தீக்ஷையானது (சாக்த தீக்ஷை) நமது பாரத கலாசாரத்தில் உபாஸனா வழியில் மிகச் சிறந்த செயல். யாருக்குமே தீக்ஷை என்பது இல்லாததை புதிதாகப் பிடித்துக் கொண்டு வருவதில்லை. அடைக்காத்து, குஞ்சு பொரிப்பது போல உள்ளே இருக்கிறதையே ஸம்ஸார ஓட்டைப் பிளந்து கொண்டு வெளியில் வரப்பண்ணுவதுதான் தீக்ஷை. மந்த்ரங்கள் என்பது பண்டைய வேத, உபநிஷக் காலத்திலேயே ஆத்ம ஞானமடைந்த மஹரிஷிகளுக்கு அவர்களது மஹா நிஷ்டையிலேயே, (ஆழ்மன ஒருமைப்பாட்டிலே) பகவத் உணர்வோடு ஒன்றிய நிலையில் தோன்றியவை. இவையே ஒரு ஸாதகனின் ஆத்ம ஞானத் திறவு

கோலாகும். பரம்பொருள் அனுபவத்தை நேரிடையாகக் கொடுக்கக் கூடியது. இந்த மந்த்ரதீக்ஷையை ஒரு ஆத்ம ஞானியான, மஹத்வம் நிறைந்த ஸித்திகள் பெற்ற ஒரு ஸத்குருவிடமிருந்து ஸாதகன் (பயிற்சியாளன்) பெற வேண்டும். இது முன் பிறவித் தொடர்பில்லாது அத்தனை ஸுலபத்தில் கிடைக்கக் கூடியதில்லை மந்த்ரத்தின் சிறப்பு. தீக்ஷாதத்வம், குருபக்தி, தெய்வபக்தி இவை பற்றி அறியாதவர்களால் இதன் மகிமையை பூரணமாக உணர இயலாது. தீக்ஷை பெற்றவர்களது மனத்தின் அடித்தளத்தில் அந்த நிமிஷம் முதலே ஒரு அற்புதமான மாற்றம் தொடங்கிவிடுகிறது. இது எப்படியுள்ளது எனில் எளிய குடிசையில் தூங்கிக்க கொண்டிருந்த ஒருவனை தூக்கத்திலேயே ஓசைப்படாமல் தூக்கிக்கொண்டு சென்று ஒரு அரண்மனை உல்லாசப்படுக்கையில் படுக்கவைத்த காலத்தில் அவனது ஆழ்நித்ரை காரணமாக எவ்வாறு இந்த மாற்றத்தை உணர இயலாதோ – அவ்வாறேதான் ஸாதகனும் தன்னுடைய மூல அக்ஞானத்தின் காரணமாக தீக்ஷையின் மாற்றம் அறிய முடியாமல் இருக்கிறது. விதை நாளடைவில் முளைவிட்டு பலன் தருவது போன்று இவனது மாற்றமும் அந்த நிமிஷம் முதலே தொடங்கி மிக உயர்ந்த ஆத்மஞானம் அடைகிறான். ஆன்மீக சாதனையாக தொடர் பயிற்சியினை இந்த ஸாதகன் செய்யதாக வேண்டும். பக்தி, சிரத்தைக்கு ஏற்ப இவனுக்கு குருவின் கருணையும் கட்டளையும் கிடைக்கும். இந்த தீக்ஷைக்காக ஸாதகன் மிகுந்த ஈடுபாட்டோடு காத்திருந்து, அபூர்வமான மங்களவேளையில், குருவின் சந்தோஷம் மிக்க வேளையில் பெற்று தனக்குத் தானே போற்றிப் பாதுகாத்து, ஸாதனா பலத்தனாலே இதனை பேரானந்த ஸாம்ராஜ்யத்தின் வாயிற்படியாக மாற்றுகிறான்.

## 4. தீக்ஷா முறைகள்:

| | | |
|---|---|---|
| 1 | ஸ்பர்சம் | குருதன் திருக்கரங்களால் சீடனைக் தொடுவது. |
| 2 | நயனம் | தன் அருட்பார்வையால் சீடனை நோக்குவது. |
| 3 | மானஸம் | தன்மனத்தால் சீடனின்மனத்தை தன்வயப் படுத்துவது |
| 4 | வாசிகம் | தன் அருள் வாக்குகளால் சீடனுக்கு உபதேசிப்பது |
| 5 | மந்த்ரம் | மந்த்ரங்களை உபதேசித்து அருள்வது. |
| 6 | யோகம் | யோகமுறையால் அருளி ஏற்பது. |

இது ஸகல வித்யாப்ரதமாயும் ஸ்ரீப்ரதமாயும், மோக்ஷப்ரதமாயுள்ள வித்தையாம். இதன் ஞான மாத்ரத்தினாலேயே மஹாஸித்தி அடையப்படும் என்பது மஹான்கள் வாக்கு ஸ்ரீமத்பஞ்சதசாக்ஷரியான ஸ்ரீவித்யா

ஸ்வரூபிணியான பரதேவதையை நன்கு ஆராதிக்காமல் ஒருவன் எவ்வளவு காலம் எத்தனை சாஸ்த்திரங்களை கற்றாலும் அவை பயன்படாது. ஸ்ரீவித்யா உபாஸகனுக்குப்பிறரால் அநிஷ்டமாக பாவிக்கப்படும் வஸ்துக்கள் கூட இஷ்டமானவையாக ஆகிவிடும் என்பது ஸித்தம். எனவே இந்த பரதேவதையை உள்ளபடி எவன் அறிகிறானோ அவனே ப்ரஹ்மவித் எனப்படுகிறான். பஞ்ச கோசங்களுக்கும் அதீதமானதும் விலக்ஷணமானதுமான ஆத்மஸ்வருபமே பரதேவதை என்பதும் விச்வ அதிஷ்டான பரப்ரஹ்மத்துக்கும் இந்த பரதேவதைக்கும் கொஞ்சமும் பேதமில்லை என் சாஸ்திரத்தில் உறுதிசெய்யப்பட்டது. மேற்கண்ட விஷயங்கள் யாவும் ஸந்தேக விபரீதமற்ற தீக்ஷையின் மஹாபலன் ஆகும். இதுபோன்ற தீக்ஷை பெற்றவன் தெய்வ ஸம்பத்துக்களை அடைந்தவனாகின்றான். இப்படிப்பட்ட சிறப்புடைய தீக்ஷை குருநாதருக்கு கிடைத்தபின் மிகுந்த பொறுப்போடு, சிரத்தையோடு "ஸ்ரத்தாவான் லபதே ஞானம்" என்றபடி அதனை வளர்த்தார். அவர் எந்த கர்மாவை செய்தாலும், அதில் ஓர் ஒழுங்கு முறையும். ச்ரத்தையும் இருக்க வேண்டும் என்பது அவரது கொள்கையாகவே இருந்தது. எல்லாவற்றிற்கும் ஓர் தீர்மானம் வேண்டும்: உண்மையே பேசவேண்டும்; பரதனத்தில் ஆசை வைக்கக்கூடாது என்பதான உபாஸக தர்மத்தை குறைவற கடைபிடித்தார். வேதஉபநிஷத்துக்களில் எந்த பரம்பொருளின் ஸ்வரூப விளக்கம் காணப்படுகிறதோ அதுதான் தந்த்ர சாஸ்த்ரங்களிலும் கூறப்பட்டிருக்கிறது என ஆராய்ந்து உணர்ந்தார்.

## 5. குருகுலம்

ஸ்ரீசிதானந்தர் அடிக்கடி தனது சிஷ்யர்களுக்கும், நண்பர்களுக்கும். உபாஸனா தத்வங்களைப் பற்றி பாடம் நடத்துவதுண்டு. உபன்யாஸங்களும் செய்வார்கள். தத்வ ஆராய்ச்சிகளும் நடைபெறுவதுண்டு பிற்காலத்தில் "ஸார்" அவர்களால் எழுதி பிரசுரமான ஸ்ரீவித்யா ஸபர்யாபத்ததி, ஸ்ரீவித்யா ஸபர்யா வாஸனா விமர்ஸம் ஆகியவை இவ்வாறுதான் பிரகாசத்துக்கு வந்தது. இந்த வகுப்புகளில் குருநாதரும் தவறாது கலந்து கொண்டு மௌனமாக ஸ்ரவணம் செய்வார்கள். அக்காலங்களில் அதாவது 40களில் இவருடன் சக சிஷ்யர்களான பலரும் நண்பர்களும் வருவதுண்டு. அவர்களில் சிலர் –

ஸ்ரீDR அனந்தய்யர்
TL வெங்கட்டராமய்யர்,
ஸ்ரீTK ஸுப்ரமண்ய ஐயர்,

ஶ்ரீநடுமிண்டி, N நரஸிம்மய்யர்,
ஶ்ரீவெங்கட நரஸய்யா,
ஶ்ரீநடேசய்யர்.
பண்டித ப்ரவர,பண்டித ராஜா ஶ்ரீஎஸ். சுப்ரமண்ய சாஸ்த்ரி M.A.,
இஞ்சிக்கொல்லை ஶ்ரீS.குஞ்சிதபாதமய்யர்.
V கிருஷ்ணசாமிஐயர்,
Dr.M சுப்பிரமணியஐயர்
சாஸ்த்ரரத்னாகர, ஆத்ம வித்யா பூஷண ப்ரம்மஶ்ரீ
ஶ்ரீஜகதீஸ்வரசாஸ்த்ரிகள்,
ஶ்ரீA நடராஜய்யர்,
பூக்கடை ஶ்ரீசுந்தர சாஸ்த்ரிகள்,
திருப்புகழ்மணி TM கிருஷ்ணசாமிஐயர்,
மாம்பலம் ஶ்ரீகுருமூர்த்திஐயர்,
விடயல்கருப்பூர் ஶ்ரீA கிருஷ்ணமூர்த்திஐய்யர்,
ஶ்ரீவேலவன்.
E.R கிருஷ்ணசாமி ஐய்யர்.
ஶ்ரீசங்கரராம சாஸ்த்ரி,
மோஸூர் ஶ்ரீசுப்ரமண்ய சாஸ்த்ரி,
பந்த்ரவாஸி ஶ்ரீவெங்கட்ராமைய்யர்.

மற்றும் பலரும் இவருடன் பயின்றார்கள்.